கொழும்பு பல்கலைக்கழகம் - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு

எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.5.1 பெறவேண்டியவைகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
01 தொடக்கம் 05 ஆண்டுகள் வரையான காலமாக நிலவி வருகின்ற கூட்டுத்தொகை ரூபா 36,894,139 தொகையான 14 பெற வேண்டிய மீதிகள் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அறிவிடுவதற்கு தவறியிருந்தது.	இந்த ஆண்டினுள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உரிய காலத்தில் பணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	2022 இன் 25 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு வரிச் சட்டத்தின் கீழ் எந்தவொரு வகையான சேவையை வழங்குவது தொடர்பான (சீ) பிரிவு	எந்தவொரு சேவையும் வழங்குவதன் ஊடாக பெறப்பட்ட மற்றும் பெற வேண்டிய வருமானத்தின் அடிப்படையில் சமூகப் பாதுகாப்பு வரி கணிக்கப்பட்டு செலுத்தப்பட வேண்டிய போதிலும், காசு அடிப்படையாக கணிக்கப்பட்டமையின் காரணத்தினால் ரூபா 15,828,466 ஆன வரி தொகை குறைவாக செலுத்தப்பட்டிருந்தது.	இந்த வரிக் (SSCL) கொடுப்பனவு பெறப்பட்ட மற்றும் பெற வேண்டிய வருமானத்தின் அடிப்படையில் அல்லாமல் ஆண்டில் பெறப்பட்ட பாடநெறிக் கட்டணங்களின் அடிப்படையில் செலுத்தப்படுகின்றது மற்றும் பெற வேண்டிய வருமானத்தின் அடிப்படையில் SSCL செலுத்தப்பட நேரிட்டால், அது பெறப்படாத வருமானத்திற்கான கொடுப்பனவு என்பதனால், பல்கலைக்கழக நிதியைப் பயன்படுத்தி அதை செலுத்த நேரிடுகின்றது.	சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	2022 ஏப்ரல் 26 திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் 03(viii) ஆம் பந்தி	அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்படாத நலன்புரித் திட்டங்கள், அபிவிருத்தி உதவிகள் அல்லது மானியங்கள் வழங்குவதை நிறுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், ஊழியர்களின் நலன்புரி நிதியங்கள் 02 இற்காக 2022 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரையில் ரூபா 46,133,315 ஒதுக்கப்பட்டிருந்தது.	2008 ஆம் ஆண்டு தொடக்கம் கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரத்துடன் செயற்படுத்தப்பட்டு வருகின்ற நலன்புரி திட்டம் மற்றும் பல்கலைக்கழகச் சட்டத்தின 1 ஆம் பகுதியின் 08 ஆம் பிரிவின் பிரகாரம், பதவியணியினரின் நலனுக்காக ஒரு நலன்புரி முன்மொழிவுத் திட்டம் நிறுவுதல் மற்றும் ஒழுங்குப்படுத்தல் அவசியமாகும்.	சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	2023 சனவரி 18 திகதிய BD/HRD/126/214/19/2023 ஆம் இலக்க திறைச்சேரி சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி	ஒப்பந்த பத்திரங்களை மீறிய பேராசிரியர்களிடமிருந்து மீளாய்வு செய்யப்பட்ட ஆய்டினுள் அறவிடப்பட்ட ரூபா 200,966,093 தொகையான நிதி சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் திறைச்சேரிக்கு அனுப்புவதற்கு பதிலாக நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.	பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழுவின் நிதிச் சுற்றறிக்கை 05/2023 பிரகாரம் ஏழு வருட விடுமுறை மற்றும் முதுநிலை பட்டங்களுக்குரிய விமான பயணச்சீட்டிற்காக கொடுப்பனவுகள் இதன் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.	-மேற்படி-

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 488,025,578 ஆன மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 576,936,961 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 88,911,383 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இதற்கு மூலதன செலவுகளுக்கான ஏனைய மானியங்கள் ரூபா 299,534,131 இனால் குறைவடைந்தமை பிரதான காரணமாகும்.

2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

நிறுவனத்தின் ஒட்டுமொத்த வருமானம் முன்னைய ஆண்டை விட ரூபா 728,987,854 ஆன தொகை அதாவது 7 சதவீத அதிகரிப்பை காண்பிக்கப்படுகின்றதுடன் ஒட்டுமொத்த செலவு ரூபா 817,899,237 ஆன தொகை அதாவது 8.5 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	2025 மார்ச் 24 ஆம் திகதி மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் பிரகாரம், 06 மோட்டார் சைக்கிள்கள், 01 லொரி மற்றும் மிட்சுபிஷி வகை காரொன்று பல்கலைக்கழகத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அவை பௌதீக ரீதியாக காணப்படாததுடன் அவ் வாகனங்கள் 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் கைதவிர்ப்பு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய எழுத்துமூல சான்றுகள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் விற்கப்பட்டுள்ள இந்த வாகனங்களை வாங்கியவர்கள் அவர்களின் பெயருக்கு மாற்றிக் கொள்ளவில்லை என்பதுடன் 02 வாகனங்களை கறுப்புப்பட்டியலில் சேர்ப்பதற்கு மோட்டார் வாகன போக்குவரத்து ஆனையாளர் அலுவலகத்திற்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.	மோட்டார் வாகனங்கள் சட்ட ரீதியாக கையளிப்பதற்கும் கைதவிர்ப்பு செயன்முறைகள் உரிய முறையில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 25,268,200,000 பெறுமதியான 19.23 ஹெக்டேர் பரப்பளவை கொண்ட 07 காணித் துண்டுகள் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் பல்கலைக்கழகத்திற்கு சட்டரீதியாக கையகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	இந்த காணி சட்டரீதியாக கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	காணி கையகப்படுத்தும் நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளல் வேண்டும்.
(இ)	பல்கலைக்கழகத்தின் ப்ளோம்.:.போன்டைன் விடுதிக்கு பின்னால் அமைந்துள்ள கட்டிடத்தை பழுதுபார்த்து மேம்படுத்துவதற்காக ரூபா 17,235,347 (வற் அற்று) ஆன மதிப்பீட்டின் அடிப்படையில் 2019 ஆகஸ்ட் 20 ஆம் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டு இது 2020 ஆகஸ்ட்	இந்த விடயம் குறித்து ஆய்வு செய்யப்பட்டு விசாரணை நடத்துமாறு மற்றும் நிறுவனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தினை அறவிடுவதற்கு பதிவாளருக்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.	பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொண்டு அதன் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை

20 ஆம் திகதி நிறைவு செய்வதற்கு உடன்பட்டு அதற்காக ரூபா 3,237,069 வேலை முற்பணம் 2019 ஒக்தோபர் 22 ஆம் திகதி பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. எனினும் அப்போதிருந்த பிரதி பதிவாளர் (மருத்துவம்) அவர்களின் ஆலோசனை அடிப்படையில் ஒப்பந்தக்காரரினால் வேறு ஒரு கட்டிடத்தை வர்ணம் பூசப்பட்டு மற்றும் குளியலறையை பழுதுபார்க்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தத்திற்காக பெற்றுக் கொடுக்கப்பட்ட முற்பண உத்தரவாதத்தின் செல்லுபடியாகும் காலம் 2020 யூலை 23 ஆம் திகதி நிறைவடைந்திருந்தது.		எடுக்கப்படல் வேண்டும்.

3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடு

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	தேவை கண்டறியப்படாது 2018 ஆம் ஆண்டுக்கு முன்னர் விஞ்ஞான பீடத்தின் 04 பிரிவுகளுக்கு மற்றும் மருத்துவ பீடத்திற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த முறையே ரூபா 6,859,643 பெறுமதியான 1556 உறுப்படிகள் மற்றும் ரூபா 1,006,612 பெறுமதியான 226 உறுப்படிகள் பயன்படுத்தப்படாது விளைவற்று காணப்பட்டது.	இந்த இரசாயண பொருட்கள் காலாவதியாகாமையினால் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு இருப்பாக வைக்கப்பட்டுள்ளது மற்றும் காலாவதியானாலும் பரிசோதனைகளுக்கு தேவையான பல்வேறு பணிகளுக்காக அவற்றை பயன்படுத்த முடியும்.	இரசாயனப் பொருட்கள் கட்டளை இடல், பெற்றுக் கொள்ளுதல் மற்றும் வழங்குவதற்கு சரியான நடைமுறைகள் அறிமுகப்படுத்தல் மற்றும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 47 கணக்குகளில் நிலவிய கூட்டுத்தொகை ரூபா 134,671,074 ஆன தொகை நோக்கம் சார்ந்த பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	பல்கலைக்கழகத்தில் பல்வேறு நோக்கங்களுக்காக வெவ்வேறு நாளேட்டு கணக்குகள் உருவாக்கப்பட்டிருந்தாலும் ஒரு நிதி மட்டும் இருந்தது மற்றும் 2024 ஆம் ஆண்டில் மீண்டெழும் செலவுகள் மற்றும் மூலதன செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.	47 கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள பணத்தை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	உயர் கல்வியை விரிவுப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தலை விரைவுப்படுத்தும் செயற்திட்டத்தின் (AHEAD) ரூபா 12,128,005 ஆன நிதியேற்பாட்டின் ஊடாக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முனைவர் பட்டம் படிப்பதற்கு வெளிநாடு சென்றிருந்த மூன்று விரிவுரையாளர்கள் பல்கலைக்கழக சேவைக்கு மீண்டும் அறிக்கை	விரிவுரையாளர்கள் மூவரும் ஒப்பந்த காலத்தினுள் சேவையிலிருந்து விலகியிருந்த போதிலும் அவர்களின் பிணைப்பணத்துடன் புலமைபரிசில்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட தொகையும் அறவிடப்படும்.	செயற்திட்ட நோக்கங்கள் மேம்படுத்தும் வகையில் புலமைபரிசில்களை வழங்கும் போது ஒழுங்குமுறை நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட

	செய்யாததால் ஏற்கப்பட்ட செலவு விளைவற்று காணப்பட்டதுடன் வெளிநாட்டு கடனாக பெறப்பட்ட இந்த செயற்திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட கல்விப் பாடநெறிகளின் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்திற்கு இத பாதகமாக தாக்கமளித்திருந்தது.		வேண்டும்.

3.3 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
	பல்கலைக்கழகத்தின் உதவி மையம் (Help Zone) அமைப்பது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.		
(அ)	2019 செப்தெம்பர் 26 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 24 மாதங்களுக்குள் திட்டமிட்டு நிறைவு செய்யும் அடிப்படையில் (Design and Build) ரூபா 520,120,959 (vat அற்ற) ஆன ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்திருந்த போதிலும் பௌதீக செயன் முன்னேற்றம் 82 சதவீதத்துடன் 2023 செப்தெம்பர் 11 ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தம் நிறைவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு ஒப்பநதம் நிறைவு செய்வதற்காக கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியதுடன் நிறைவு செய்யும் போது நிறைவு செய்யப்பட வேண்டிய பணிகள் மற்றும் தொடர்ந்தும் வேறு முறைமையொன்றின் ஊடாக நிறைவேற்றப்பட வேண்டிய வேலைகள் என்ன என்பது குறித்து முறையான ஒப்பந்தம் ஊடாக உறுதி செய்யப்பட்டிருக்கவில்லை.	2023 பெப்ரவரி 07 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் தீர்மானத்தில் உள்ளடங்கிய "3.4(ii)" ஆம் அவதானிப்பின் பிரகாரம் ஒப்பந்தங்கள் நாளதுவரையாக்கப்படல் அல்லது புரிந்துணர்வு ஒப்பந்தம் நிறைவு செய்யப்பட்டுள்ளது மற்றும் அவ் அமைச்சரவை தீர்மனத்தின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஊடாக தொடர்புடைய பெறுகை நிறுவனமான திணைக்கள பெறுகை குழுவின் அங்கீகாரம் பிரகாரம் 2023 ஆகஸ்ட் 29 திகதிய கடிதத்தின் ஊடாக அத்தியாவசிய வேலைகளை செய்வதற்கு ஒப்பந்தக்காரருக்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது மற்றும் கடிதத்தின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட வேலைகள் நிறைவு செய்யப்பட்டு கட்டிடம் கையளிக்கப்பட்டுள்ளது.	ஒப்பந்தம் நிறைவு செய்யப்பட வேண்டிய உரிய நடைமுறைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	கட்டிடத்தின் டைல் வேலைகளுக்கான அளவுகளின் பட்டியல் பெறுமதி விவரக் குறிப்புகளிலிருந்து விலகி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் கதவுகள், ஜன்னல்கள் மற்றும் பிரிப்புகளின் (Partition) வேலைகளுக்காக விரவக்குறிப்புகளிலிருந்து விலகி ரூபா 13,255,800 செலுத்தப்பட்டிருந்தது.	தொழில் வழங்குனரின் தேவையின் (Employer Requirement) பிரகாரம் செயற்திட்ட திட்ட கட்டிடக் கலைஞரால் (Project Architect) பரிந்துரைக்கப்பட்டுள்ள டைல் மாதிரிகள் பல்கலைக்கழக செயற்திட்ட பொறியியலாளரினால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் டைல் பதிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது மற்றும் Doors, Windows, Partition இற்காக Material Specification பிரகாரம் Powder	ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரக் குறிப்பு பிரகாரம் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும்.

		Coated Aluminum பயன்படுத்தப்பட்டுள்ளது மற்றும் அதற்னு தொடர்புடைய பற்றுச் சீட்டுகள் காணப்படுகின்றது.	
(இ)	வேலைத்தள முற்பணம் செலுத்தும் போது ஒப்பந்தக்காரரினால் அந் நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்ட முற்பண பட்டியல்களை அடிப்படையாகக் கொண்டு 2 மின் தூக்கிகள் மற்றும் VRF AC Machine இற்காக கூட்டுத்தொகை ரூபா 25,351,005 செலுத்தப்பட்டிருந்தது. பெறுமதி ரூபா 19,496,340 ஆன AC Machine பொருத்தும் மற்றும் நிறைவு செய்யும் வேலைகள் 2021 திசெம்பர் 16 தொடக்கம் 2025 ஆகஸ்ட் 16 வரை (819 நாட்கள்) காலம் கடந்திருந்த போதிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 09 தொடக்கம் 21 வரையான பட்டியல்கள் ஊடாக வேலைத்தள முற்பணமாக ஒப்பந்தக்காரருக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு ஊடாக விளைவற்ற காசுபாய்ச்சலுக்கு இடமளிக்கப்பட்டிருந்தது.	இரண்டு மின் தூக்கிகளை நிறுவுதல் மற்றும் வளி பதனாக்கி அமைப்பினை நிறுவுதல் தொடர்பாக MEP ஆலோசகரின் பௌதீக மற்றும் தர பரிசோதனையின் பின்னர் குறித்த அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் ஒப்பந்தக்காரரினால் அம் முற்பணம் செலுத்தப்பட்ட பின்னர் (tax invoice) material at site என பில் செய்யப்பட்டுள்ளது மற்றும் SBD/04 14.03 e பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அவ்வாறு கொடுப்பனவு செய்வதற்கு முடியும் என்பதனால் மேலதிக காசுப் பாய்ச்சலொன்று ஏற்படவில்லை. வளி பதனாக்கி அமைப்பு செயற்படுத்துவதற்கு மேலும் சில உபகரணங்கள் மற்றும் குழாய்கள் பொருத்தப்பட வேண்டும் மற்றும் அவ்வாறு பொருத்துவதற்குரிய அடிப்படை நடவடிக்கைகள் Abans நிறுவனத்துடன் கலந்துரையாடப்பட்டு வருகின்றது மற்றும் அதன் பிரகாரம் இந்த அமைப்பு இன்னும் செயல்படத் தயாரான நிலையில் இல்லை. (Testing and commissioning)	முற்பண பட்டியல்களுக்காக வேலைத்தள (Material advance) முற்பணம் பெற்றுக் கொடுக்கப்படக் கூடாததுடன் தொடர்ந்தும் நிலுவையிலுள்ள முற்பணம் உடனடியாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஈ)	ஒப்பந்தத்தின் Price Proposal இன் 1.16 பிரகாரம் செயற்திட்ட முகாமைத்துவத்திற்காக ரூபா 6,120,000 தவணையாக ஒப்பந்தக்காரரினால் மேற்கொள்ளப்பட்ட வேலைக்கு ஏற்ப கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் செயற்திட்டத்தின் செயன் முன்னேற்றம் நிறைவு செய்வதற்கு முன்னர் மொத்த தொகையும் கொடுப்பனவு செய்தமையினால் ரூபா 1,106,600 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.	SBD/04 14.4 இன் பிரகாரம், ஒப்பந்தக்காரரினால் மேற்கொள்ளப்பட்ட வேலையின் அளவு பரிசீலிக்கப்பட்டு குறித்த சீராக்கல்கள், இறுதி பட்டியல் ஊடாக மேற்கொள்ளப்படும்.	தொடர்புடைய பணிகள் நிறைவு செய்வதற்கு முன்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்படக் கூடாததுடன் மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(உ)	அளவீட்டு பட்டியல் செலவின விடங்கள் 08 இற்கு உரிய மேற்கொள்ளப்பட்ட வேலைகளாக பட்டியலுக்கு சேர்க்கப்பட்டு அதற்கு பணம் செலுத்தப்பட்ட பின்னர் பட்டியல்களிலிருந்து கழிக்கப்பட்டிருந்தமையினால் ரூபா 1,220,345 நிறைவேற்றப்படாத	SBD/04 பிரிவின் பிரகாரம், இந்த தொகை இறுதி பட்டியல் ஊடாக சீர் செய்யப்பட்டு (adjusted) திருத்தப்பட்ட கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையினால் மேலதிக கட்டணம்எதுவும் செலுத்தப்படவில்லை.	வேலை நிறைவு செய்யப்படாது மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட

	வேலைகளுக்காக மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகை 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		வேண்டும்.
(ஊ)	10 ஆதரவுச் சேவைகள் வழங்குவதற்காக 1500 சதுர மீட்டரிலான முதலாம் மாடியும், தேசிய மற்றும் சர்வதேச விருந்தினர்களை தங்க வைப்பதற்கு மற்றும் பராமரிப்பு கல்வித் வேலைத்திட்டத்தில் மாணவர்களை பயிற்சியாளர்களாக சேவையில் பணிப்பதற்கு இரண்டாம் மாடியில் முன்மொழியப்பட்டு தயாரிக்கப்பட்ட 25 அறைகளும் பிரதான நோக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	இந்த கட்டிடத்தின் கழிவுநீர் அமைப்பு, பிரதான குழாய் அமைப்புக்களுடன் 2025 மார்ச் 31 ஆம் திகதி இணைக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் அச் செயற்திட்டம் இறுதி வரையில் இரண்டாம் மாடியை குறித்த நோக்கங்களுக்காக பயன்படுத்த முடியாததுடன் இரண்டாவது மாடியில் உள்ள அறைகளுக்கான பொருட்கள்/ உபகரணங்கள் பெறுகை நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது மற்றும் அந் நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்ட பின்னர் இந்த மாடி பயன்படுத்தக் கூடும்.	கட்டிட வளாகத்தின் அனைத்து மாடிகளையும் முன்மொழியப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்த விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(எ)	கேட்போர் கூடத்தை நிர்மாணிப்பதற்கு முன்னர் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் ரூபா 28,060,000 பெறுமதியான 1025 கேட்போர் கூட கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவை 2025 செப்தெம்பர் இறுதி வரையிலும் பயன்படுத்தாது விளைவற்று காணப்பட்டன.	இந்த கதிரைகள் செயற்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட நன்கொடையாகும் மற்றும் அச் செயற்திட்டத்தின் காலப்பகுதிய 2025 யூன் 30 ஆம் திகதி நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளமையினால் இந்த கதிரைகள் கொள்வனவு செய்வதன் ஊடாக பல்கலைக்கழகத்திற்கு மேலதிக நிதிச் செலவை ஏற்க வேண்டியதில்லை.	உபகரணங்கள் பயன்படுத்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஏ)	இடைநிலை பட்டியல்கள் 1 தொடக்கம் 19 வரை ரூபா 416,727,401 இல் ரூபா 27,044,620 கட்டணம் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமையினால் திட்டமிடப்பட்டு நிறைவு செய்யும் அடிப்படையிலான (SBD 4) ஒப்பந்தத்தில் உடன்பட்ட ஒப்பந்த பெறுமதியில் இவை அனைத்தும் உள்ளடக்கப்படல் வேண்டும். அதன் பிரகாரம் அது மேலதிக வேலையாக இனங்காணப்பட்டு செலுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிராமையினால் அது மேலதிக கட்டணமாகும்.	கட்டிடத்தை முறையாக பயன்படுத்த வேண்டியதன் தேவை மற்றும் கொழும்பு மாநகர சபையிடமிருந்து கட்டிடங்கள் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைகளின் அடிப்படையில் இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது மற்றும் இது ஒப்பந்தக்காரரினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட வடிவமைப்பு மற்றும் தொழிநுட்ப (Design and Technical)/ விலை முன்மொழிவிற்கு (Price Proposal) உள்ளடக்கப்படாது மற்றும் இதற்கு தொடர்புடைய நிதியேற்பாடுகள் ஒப்பந்த நிபந்தகைனளின் பிரகாரம் SBD/4 பிரிவின் 13.0 ஊடாக குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் கட்டிடம் பயன்படுத்தும் போது அத்தியாவசியமான விடயங்கள் மற்றும்	திட்டமிடப்பட்டு நிர்மாணிக்கும் அடிப்படையிலான ஒப்பந்தத்தின் Technical Proposal இல் அனைத்தும் உள்ளடக்கப்பட வேண்டியதுடன், அவ்வாறு இல்லாத வேலைகள் மேலதிக வேலையாக கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

		CMC தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.	
(ஐ)	நில அலங்காரம் மற்றும் அழகியல் இன் கீழ் சுற்றுச்சூழலுக்கு உகந்த கட்டமைப்பை எதிர்பார்ப்பதற்கு தொடர்புடையதாக கட்டிடத்தின் கீழ் தளத்தில் புல் இடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் புற்கள் அமைக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கட்டிடத்தின் முன் முற்றத்தில் கற்களை பதிப்பதற்கு ரூபா 3,451,120 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அது உரிய தரத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	ஒப்பந்தக்காரர் புல் அமைக்கும் பணிகளை நிறைவு செய்திருந்ததுடன் கழிவுநீர் அமைப்பு, பிரதான குழாய் அமைப்புடன் இணைக்கும் செயற்திட்டத்தின் ஒப்பந்தக்காரர் தொடர்புடைய பணிகளை மேற்கொள்ளும் போது சேதம் ஏற்பட்டிருந்ததுடன் அது குறித்த ஒப்பந்தக்காரரின் ஊடாக மீண்டும் சீர் செய்வதற்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.	வேலைகள் பூர்த்தி செய்யும் போது முன்னுரிமைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.